
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1195**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




**- வாழ்வோம்**

---

# மாநாடு

**ர.பிரகாசு**

**114**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## காங்கிரஸின் ஏமாற்றுத் தீர்மானம்!

*1954-ஆம் ஆண்டு, டிசம்பர் 19, 20 ஆகிய தேதிகளில், கர்நாடக மாநிலம் பெங்களூருவில், தி.மு.க. மாநாடு நடைபெற வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அங்கு பட்டு ஆலை ஒன்றில் நடைபெற்ற வேலைநிறுத்தம் காரணமாக, 50 தொழிலாளர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டு, மறியலில் இறங்கினர். இதனால், பெங்களூருவில் 144 தடை உத்தரவு அமலில் இருந்ததால், மாநாடு 1955 ஜனவரி 1, 2 ஆகிய தேதிகளுக்கு மாற்றப்பட்டது. எனினும், அந்தத் தேதிகளிலும் மாநாடு நடைபெறாமல் பிப்ரவரி 12, 13 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றன. முதல் நாள் சமூக சீர்திருத்த மாநாடும், இரண்டாவது நாள் அரசியல் மாநாடும் நடைபெற்றன.*

பெங்களூரு பிளாக் பள்ளித் திடலில், மஜீத் பந்தல், கைலாயம் அரங்கில், மாநாடு கூடியது.

ப.உ.சண்முகம் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். வி.எஸ்.பதி அனைவரையும் வரவேற்றார். முதல் நாள் மாநாட்டுக்குத் தலைமை வகித்த கல்யாணசுந்தரம், சீர்திருத்த மாநாட்டின் நோக்கம் குறித்தும் சமுதாய மாற்றத்தில் தி.மு.கழகம் கொண்டுள்ள அக்கறை குறித்தும் விவரித்தார். மதிய உணவுக்குப் பிறகு, மீண்டும் மாலை 3.30 மணிக்கு மாநாடு கூடியவுடன் 'போராட்டம்' எனும் தலைப்பில், முகவை ஆர்.எஸ். பாண்டியன், 'பேய், பூதம், பிசாசு' எனும்



ஓவியம் : சிகரன்

தலைப்பில், அ.பொன்னம்பலனார் ஆகியோர் பேசினர். தமிழாசிரியர் வெங்கடாசலனார், கே.ஏ.மதியழகன், பேராசிரியர் அன்பழகன் ஆகியோரும் அடுத்தடுத்துப் பேசினர். இறுதியாக, நாவலர் நெடுஞ்செழியன் சிறப்புரையுடன் முதல் மாநாடு முடிவுற்றது.

மறுநாள் காலை 10 மணிக்கு, அரசியல் மாநாட்டை சி.பி.சிற்றரசு தொடங்கிவைத்தார். 'வாழ்க வாழ்கவே-வளமார் எமது திராவிடம்' என்ற பண் இசைக்க, தொண்டர்களின் பேரொலிக்கு மத்தியில் மாநாட்டின் முகப்பில் இருந்த கொடிக்கம்பத்தில் இருவண்ணக் கொடியை ஏற்றிவைத்தார் என்.வி.நடராசன். அப்போது, தொண்டர்களின் அணிவகுப்பும் எழுச்சியோடு நடைபெற்றது. பின்னர், எஸ்.ஜே.உசேன் அனைவரையும் வரவேற்றார். இரண்டாவது நாள் மாநாட்டுக்குத் தலைமையேற்ற என்.வி.நடராசன், தி.மு.கழகத்தின் இலட்சியத்தை அனைவருக்கும் புரியும் வண்ணம் திறம்பட விளக்கிப் பேசினார். மதிய உணவுக்குப் பிறகு மீண்டும் மாநாடு தொடங்கியவுடன், காஞ்சியைச் சேர்ந்த கா.வே.முருகேசன் பாடல்கள் பாடினார்.

அடுத்து, ஆர்.எஸ்.பாண்டியன் கழகத்தின் இலட்சியம் குறித்துப் பேசினார். குப்பன் - ருக்மணி ஆகியோர் திருமணம் மாநாட்டு மேடையில் அ.பொன்னம்பலனாரால் நடத்தி வைக்கப்பட்டது.

அப்போது, ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட 'சோசலிசம் போன்ற சமூக அமைப்பு' என்ற தீர்மானத்தின் ஏமாற்றுத்தனத்தை, ஈ.வெ.கி.சம்பத் விளக்கினார். 'திராவிட நாடு திராவிடருக்கே' எனும் இலட்சிய முழக்கத்திற்கு கன்னட மக்கள் ஆதரவு தர வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அத்தீர்மானத்தின் மீது நாவலர் உரை நிகழ்த்தினார். அதனை வழிமொழிந்து, மு.க.வேந்தன் கன்னடத்தில் பேசினார். ஐந்தாண்டுத் திட்டங்களால் வடக்கு வாழ்வதும், தெற்கு தேய்வதுமான சூழ்ச்சியைக் கண்டித்து, நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து கே.ஏ.மதியழகன் பேசினார்.

இறுதியாக, பேசிய பேரறிஞர் அண்ணா, "வடநாட்டில் என்னதான் ஒற்றுமை கீதம் பாடினாலும், ஒற்றுமையை நிலைக்க வைக்க முடியாது. இந்தியாவிலே, கடைசி சமரசத் தூதர் நேருவாகத்தான் இருப்பார். அவருக்குப் பின், இந்தியத் துணைக்கண்டம் இந்து மத வெறியர்களின் கையில் சிக்கி சீரழியப்போகிறது" என்று வடநாட்டுக்கும் தென்னாட்டிற்குமான வேறுபாடுகளை, தனது உரையில் படம் பிடித்துக்காட்டினார்.

**...கூட்டம் திரளும்**

---

## இஸ்லாம் வெறுப்பே 'வந்தே மாதரம்'!

ஒன்றிய பா.ஜ.க. அரசு, 'வந்தே மாதரம்' பாடலை தேசிய கீதத்துடன் இணைத்துப் பாட வேண்டும் என்றபோது, அதற்கு எதிர்ப்பு தெரிவித்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். இன்று தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத வகையில், தமிழ்நாடு அரசு பதவி ஏற்பு விழாவில் மூன்றாம் இடத்திற்கு தமிழ்த்தாய் வாழ்த்து தள்ளப்பட்டுள்ளது. இந்த நடைமுறை பெரும் விமர்சனங்களைச் சந்தித்து வரும் நிலையில், வந்தே மாதரம் பாடலின் பொருள் குறித்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை ராஜேந்திரன் எழுதிய பதிவு, சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

பங்கிம் சந்திர சட்டர்ஜி என்ற வங்காளப் பார்ப்பனர், 1880-இல் எழுதிய 'ஆனந்த மடம்' என்ற வங்க மொழி நாவலில் இடம் பெற்றுள்ள ஒரு பாடல் அது. அப்போது ஆட்சியிலிருந்த கிழக்கிந்திய கம்பெனி, முஸ்லிம் மன்னர்கள் சிலருடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு சென்னை, பம்பாய், கல்கத்தா நகரங்களில் காலூன்ற முயன்ற காலகட்டம் அது.

'முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியை ஆயுதம் தாங்கிய போர் மூலம் ஒழித்துவிட்டு, இந்து - ஆங்கிலேய ஆட்சியை உருவாக்க வைணவ இந்துக்கள் ஆயுதம் ஏந்த வேண்டும்' என்பதே நாவலின் மய்யமான கருத்து. சத்யானந்தா என்ற கதை நாயகன், இந்து இளைஞர்களைத் திரட்டும்போது, அந்த கதாநாயகன் பாடும் பாடலே 'வந்தே மாதரம்'.

'நமது தாய்நாட்டை விடுவிப்பதற்கு இனம் - மதம் - பண்பாடு பெருமையைக் காப்பதற்கு, முஸ்லிம்களை ஒழித்தாக வேண்டும்; அவர்களை ஒழிக்காவிட்டால் நமது தர்மத்துக்கு எதிர்காலமே இல்லை; ஏழு கோடி இந்துக்கள் வாளேந்தி களத்தில் குதிப்போம்' என்பதே வந்தே மாதரம் பாடலின் கருத்து.

ஆக, 'வந்தே மாதரம்' தேசபக்தி பாடல் அல்ல; இஸ்லாமிய வெறுப்பையும் ஆங்கிலேயர் புகழ்ச்சியையும் கொண்டது. பாடலின் முதல் இரண்டு பத்திகள், 'தாய் மண்ணைப் புகழ்கிறது' என்பதாலேயே, அது தேசபக்திப் பாடலாகிவிடாது' என்கிறது, அவரது விளக்கம்.

---

## ஃப்ளாஷ்பேக்


உடையார்கோயில் குணா



### கவிதை நூல் கலைஞரிடம்!

1983-ஆம் ஆண்டு, தஞ்சாவூர் பூண்டி புட்பம் கல்லூரியில் இளங்கலை முதலாமாண்டு படித்தபோது, நான் எழுதிய 50-க்கும் மேற்பட்ட கவிதைகளைத் தொகுத்து, 'இளந்தென்றல்' என்ற பெயரில் கவிதைப் புத்தகமாக வெளியிட்டிருந்தேன். ஜூலை 16, 1983-இல் கலைஞர் அவர்கள் இரும்புதலை என்ற கிராமத்திற்கு கட்சிப் பிரமுகரின் குடும்ப விழாவிற்கு வந்திருந்தார்கள். நான் அவரைச் சந்தித்து என் கவிதை நூலைக் கொடுத்தேன். தட்டிக்கொடுத்து வாழ்த்தினார். உடன் அம்மாப்பேட்டை ஒன்றியப் பெருந்தலைவர் ப.சிவசாமி இருக்கிறார்.

**- உடையார்கோயில் குணா,**
**நிறுவனர், தமிழ்த்தாய் அறக்கட்டளை,**
**தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## நம் வரலாறு

### பிரம்மாண்ட ஊர்வலம்!

1958 மே 10, 11 ஆகிய தேதிகளில், திருவாரூரில் கழகத்தின் தஞ்சை மாவட்ட 3-வது மாநாடு நடைபெற்றது. திருவாரூர் புகைவண்டி நிலையத்தில் இருந்து தொடங்கிய பேரணியில் 50,000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். குதிரை, ரதங்கள், கப்பல், ஆகாயவிமானம் போல அலங்கரிக்கப்பட்ட வண்டிகள் பேரணியில் பங்கேற்றன. சேர, சோழ, பாண்டியர்கள் வேடத்தில் கழகத்தினர் வேடம் பூண்டு, கம்பீரமாக ரதங்களில் அமர்ந்து வந்தனர். அண்ணாவின் உருவம் தாங்கிய கப்பலும் மறைந்த பன்னீர்செல்வத்தின் உருவம் தாங்கிய ஆகாய விமானமும் கவனிப்பை ஏற்படுத்தின.

---

# பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்**


**114**

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## காலத்தை முன்னிறுத்தும் காலம்!

சமகால அரசியலையும் கடந்தகால வரலாற்றையும் கோர்த்து, இரண்டுக்கும் இடையில் நிலவும் ஒற்றுமைகளைச் சுட்டிக் காட்டி சுவாரசியம் நிறைந்த ஒரு கதையாடலைக் கட்டமைத்து, வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் அரசியல் கட்டுரை எழுதுபவர்கள், தமிழ்ச் சூழலில் அருகிவிட்டனர்.

இத்தகைய சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு, கருத்தாழம் மிகுந்த கட்டுரைகளைத் திராவிட இயக்கத்தின் தரப்பில், ஆழ நின்று எழுதியவர் சின்னக்குத்தூசியார் அவர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையாம் 'முரசொலி'யில் பல்வேறு தலைப்புகளில் அவர்கள் எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, 'பூக்கூடை' எனும் பெயரில், 'நக்கீரன்' பதிப்பகத்தால் வெளியிடப் பட்டுள்ளது.




பல்வேறு தன்மைகளில் 12 கட்டுரைகளைக் கொண்டுள்ள இந்நூலில், கலைஞரின் கல்லக்குடிப் போராட்டத் தருணங்கள், மியாட் மருத்துவமனை விழாவிற்குச் சென்ற இன்றைய கழகத் தலைவர் தாமாக முன்வந்து உடல்தானம் செய்த நெகிழ்வான நிகழ்வு, 5 ஆண்டுகளில் பல மடங்கு பெருகிய ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு, ஈழத் தமிழர் பிரச்சினையைக் கழகம் எதிர்க்கொண்ட விதம் எனப் பல விதமான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

இவை மட்டுமின்றி, விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டி அருகே தலித்துகளைத் தாக்கி, கலவரத்தில் உயர்சாதி மக்கள் ஈடுபட்டதையும், அதற்கான சமாதானப் பேச்சுவார்த்தையின்போது, ஒரு உயர்சாதி இளைஞர் "கிராமத்துக்குள் மீண்டும் தலித்துகள் வந்தால், அவர்களைக் கொன்று விடுவோம்" என்று காட்டுக்கூச்சல் எழுப்பி விட்டு, ஓட்டமெடுத்ததையும், அந்த இளைஞரைக் கைது செய்யும்வரை, இந்த கிராமத்தை விட்டு நகரமாட்டேன்' என்று அழுத்தமாகக் கூறிய ஆட்சியர் சிஜிதாமஸ் வைத்யன் அவர்கள் 6 மணி நேரம் அதே கிராமத்தில் அமர்ந்து அந்த இளைஞர் கைதுசெய்யப்பட்ட பிறகே, அங்கிருந்து புறப்பட்டதையும் சினிமாவுக்கே உரிய விறுவிறுப்பான நடையில், விவரித்துள்ளார் சின்னக்குத்தூசி அவர்கள்.

தமிழ்நாட்டு அரசியல் குறித்து மட்டுமின்றி, கேரள கம்யூனிஸ்ட் கட்சியில் அச்சுதானந்தன் கோஷ்டிக்கும்-பினராய் விஜயன் கோஷ்டிக்கும் இடையில் நிலவிய மோதலை, அங்கு எப்படி எதிர்கொண்டார்கள் என்பது வரை, தனது கட்டுரையில் பதிவு செய்துள்ளார்.

இடஒதுக்கீடு தொடர்பான பிரச்சினைகளில், தி.மு.கழகம் எப்படித் தொடர்ந்து வலுவான நிலைப்பாட்டில் இருந்து பிசகாமல் இருக்கிறது என்பதையும், அதற்காகக் கழகம் மேற்கொண்ட போராட்டங்களைப் பட்டியலிட்டு, ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளார்.

இதில் உள்ள பெரும்பாலான கட்டுரைகள், 2009-ஆம் ஆண்டில் வெளியானதால், அப்போது நிலவிய அரசியல் சூழலைப் பின்னணியாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளன. ஆனால், தற்போது வாசிக்கும்போதும் பொருத்தம் கொண்ட ஒன்றாகவே திகழ்கின்றன.

அரசியல் ஆய்வாளரும், திராவிட இயக்கச் சிந்தனையாளருமான சின்னகுத்தூசி அவர்களின் இந்தக் கட்டுரைகள் நமக்கு அரசியல் அறிவை மட்டும் கடத்தவில்லை, திராவிட இயக்கக் கொள்கைகளில் உறுதியாக நின்று, சுற்றி நடக்கும் அரசியல் பற்றிய ஆழமான பார்வையை, வகுத்துக்கொள்ளவும் வழிவகுப்பவை. அனைவரும் நுகரவேண்டிய பூக்கூடை இந்நூல்.

**...வாசிப்போம்.**

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900